# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2086 - 2018 අගෝස්තු මස 24 වැනි සිකුරාදා - 2018.08.24**

*2086 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1138* | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | *1145* | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | *1149* |


*__கவனிக்க.__- இலங்கை மின்சாரம் (திருத்தம்) சட்ட மூலம் 2018, ஓகத்து மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்காணி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1137 - B81443 - 5,403(2018/8)

# பதவிகள் – வெற்றிடம்

## நாரம்மல பிரதேச சபை

*ஆரம்ப மட்ட தேர்ச்சி பெற்ற, பகுதி தேர்ச்சி பெற்ற ஆரம்ப மட்டமும் தேர்ச்சி அற்ற பதவிக்காக ஆட்சேர்ப்பு*

*நாரம்மல பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு சேர்த்துக் கொள்வதற்காக இவ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுள்ள நாரம்மல பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் நிரந்தரமாக குடியிருப்பவர்களிடத்தில் இருந்து விண்ணப்பப் படிவம் கோரப்படுகின்றது.*

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01. | வெளிக்கள தொழிலாளி | 03 | 3/2016 சுற்று நிருபத்தின் PL - 1 - 2016 சம்பள குறியில் ரூபா 24,250 - 10X250 -10X270 - 10X300 -12X330 - ரூபா 36,410.00 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்புப்பாடம் தவிர்த்து) |
| 02. | காவற்காரர் | 02 | 3/2016 சுற்று நிருபத்தின் PL - 1 - 2016 சம்பள குறியில் ரூபா 24,250 - 10X250 -10X270 -10X300 - 12X330 - ரூபா 36,410.00 | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்புப்பாடம் தவிர்த்து) |
| 03. | சாரதி | 01 | 3/2016 சுற்று நிருபத்தின் PL - 3 - 2016 சம்பள குறியில் ரூபா 25,790 - 10X270 -10X300 - 10X330 - 12X350 - ரூபா 38,990.00 | (அ). வெளி விண்ணப்பதாரிகள் :<br>க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது இரு (02) பாடங் களுக்கு திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்புப் பாடம் தவிர்த்து) குறைந்த பட்சம் ஒரே தடவையில் ஐந்து பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>(அ). உள்வாரி விண்ணப்பதாரிகள் :<br>தற்போது மாகாண சபை அரச சேவையில் உரிய நிறுவனத்தில் நிரந்தர பதவியில் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் 08 ஆம் தரம் (09 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>வேறு தகைமைகள்<br>பொதியில்லாத எடை ஹொன்டர் 34 இற்கு மேற்பட்ட மோட்டார் முற்பகுதியும் பார ரேலர் மூலம் 32 பேருக்கு அதிகமான பயணிகளை கொண்டு செல்லக் கூடிய பஸ் வண்டியை செலுத்தவதற்கு மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்ட தகுதி பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். (A வகுப்பு சாரதி உரிமப் பத்திரம்) வாகன சாரதியாக 03 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (சேவை சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்). |

**02. ஆட்சேர்த்துக் கொள்வதற்கான பொது நிபந்தனைகள் :-**

(i) விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் கடைசித் திகதிக்கு 3 வருடங்களுக்கு குறையாத காலத்தினுள் நாரம்மல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர குடியிருப்பாளராக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பப் படிவம் பொறுப்பேற்கப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(iv) நாரம்மல பிரதேச சபையில் தற்போது தற்காலிக அமய, ஒப்பந்த அடிப்படையில் சேவை செய்கின்றவர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

(v) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமும் தேகாரோக்கியமுள்ளவராக இருக்க வேண்டியதுடன், தண்ட நீதிக் கோவைப்படி நீதிமன்றம் ஒன்றினால் குற்றம் சுமத்தப்பட்டு தண்டனை பெறாதவராக இருத்தல் வேண்டும்.

(vi) தற்போது மாகாண சபை அரச சேவையில் உள்ளவர் ஒருவராயின் அவர் விண்ணப்பப்படிவம் பெறுப்பேற்கப்படும் கடைசித் திகதிக்கு 05 ஆண்டு காலத்தினுள் எவ்வித எச்சரிக்கைக்கும் தண்டனைக்கு உள்ளாகாதவராக இருத்தல் வேண்டியதுடன் உரிய 05 ஆண்டுகளினுள் எல்லா சம்பள உயர்வுகளும் பெற்றிருத்தல் வேண்டும்.

(vii) நேரடி நேர்முகப் பரீட்சை மூலம் தகைமையுடையோரை தேர்ந்தெடுக்கப்படுவர்.

**03. சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்கான நிபந்தனை :**

1. இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய திட்டம் பற்றி அரசினால் பிற்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானப்படி தீர்மானிக்கப்படும்.
2. விதவைகள் /தபுதாரர் மற்றும் அநாதைகள் பங்களிப்பு உரித்துடையது.
3. நியமனம் 03 ஆண்டு காலத்திற்கு நன்னடத்தை காலமாகும்.

**04.** இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் கட்டளைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபனக் கோவை, அரச திணைக்கள கட்டளைகளுக்கும், வடமேல் மாகாண சபை அல்லது வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளுக்கும் கட்டளைகளுக்கும் அமைய

**விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் :**

விண்ணப்பப் படிவத்துடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டியதுடன், நேர்முகப் பரீட்சையின் போது முதல் பிரதியினை சமர்பித்தல் வேண்டும்,

(i) பிறப்புச் சான்றிதழ்;

(ii) கல்விச் சான்றிதழ்;

(iii) வதிவினை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ் (கிராம அலுவரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழினை பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்);

(iv) அண்மையில் பெற்றுக் கொண்ட நல்லொழுக்கம் பற்றிய சான்றிதழ் இரண்டு (இதில் ஒன்று கிராம அலுவலரினால் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்);

(v) தொழில் அனுபவம் மற்றும் வேறு தகைமைகள் அடங்கிய சான்றிதழ் (அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்).

(vi) உரிய தகைமைகளை பெற்றவர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

விண்ணப்பதாரிகள் இங்கு உள்ள மாதிப் படிவத்திற்கு அமைய ஒழுங்கமைக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற பதவியினை கடித உறையின் இடது பக்கத்தில் எழுதி, 2018.09.14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு "செயலாளர், நாரம்மல பிரதேசசபை, நாரம்மல" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். உரிய திகதிக்கு பின்பு கிடைக்கின்ற விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவம் கோரப்பட்டதன் பின்பு அல்லது கோரப்படும் சந்தர்ப்பத்தில் இவ் ஆள் சேர்ப்பினை காலதாமதப்படுத்தல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது இவ் அறிவித்தலினை இரத்துச் செய்தல் அல்லது செய்தல் என்பவற்றிற்கான பூரண அதிகாரம் நாரம்மல பிரதேச சபை செயலாளருக்குரித்தானதாகும்.

பீ. ஏ. மெத்தானந்த,
செயலாளர்,
நாலம்மல பிரதேச சபை,
நாரம்மல.

பிரதேச சபை அலுவலகம்,
நாரம்மல,
2018, ஓகத்து 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நாரம்மல பிரதேச சபை**

ஆரம்ப மட்ட தேர்ச்சி பெற்ற, பகுதி தேர்ச்சி பெற்ற, ஆரம்ப மட்டமும் தேர்ச்சி அற்ற பதவிக்காக
............................................ பதவிக்காக விண்ணப்பப்படிவம்

01. விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் : ...........................................................................................
முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் : ..........................................................................................................

02. நிரந்தர முகவரி - .......................................................................................................................................

03. நிரந்தர வசிப்பிட மாவட்டம் : ....................................................................................................................

04. பிறந்த திகதி : ஆண்டு : ............................. மாதம் : ................................. திகதி : ......................................

05. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு வயது :

ஆண்டுகள் : ............................. மாதங்கள் : ................................. நாட்கள் : ......................................

06. தேசிய ஆளடையாளவட்டையின் இலக்கம் : | | | | | | | | | | | | |

07. திருமணமானவர் / திருமணமாகாதவர் பற்றி : .........................................................................................................

08. பால் : ஆண் / பெண் : ..........................................................................................................................

09. நீங்கள் இலங்கை பிரசையா ? அவ்வாறாயின் பரம்பரையாகவா? பதிவு முறையிலா ? : ....................................................

10. கல்வித் தகைமை சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம் : ...................................................................................

க. பொ. த. (சா. த.) பரீட்சை -
சித்தியடைந்த வருடம் : சுட்டெண் :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

க. பொ. த. (உ. த.) பரீட்சை :
சித்தியடைந்த வருடம் : சுட்டெண் :

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

12. 1. வேறு கல்வித் தகைமைகள் : ..........................................................................................................................
2. தொழிற் தகைமை : ..................................................................................................................................
3. சேவை அனுபவம் : .................................................................................................................................

(i) தற்போது சேவை செய்யும் நிறுவனம் : ...........................................................................................
(ii) தற்போது வகிக்கும் பதவி : ..........................................................................................................
(iii) அந்த பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட திகதி : ........................................................................
(iv) இதற்கு முன்பு சேவை செய்த இடமும் பதவியும் : ........................................................................

13. நீங்கள் எப்போதாவது குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? ................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல் உண்மையானதும், பிழையற்றதும் என்றும் என்னால் உறுதிப்படுத்துகின்றேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும், பிழையானதும் என்றும் இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவர் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்குவதற்கு கீழ்படிகின்றேன் என்றும் எனக்குத் தெரியும்.

..............................................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ..........................................

**தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்காக நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

..................................................................... திரு./திருமதி /செல்வி இந் நிறுவனத்தில் ................................................ ஆக சேவை ஆற்றுகின்றார். இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் /அவள் சேவையில் இருந்து விடுவிக்க முடியும் /முடியாது. அவர் / அவள் 05 ஆண்டுகளினுள் எச்சரிக்கை தவிர எவ்வித தண்டனைக்கும் உட்படவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதுடன், அவர் / அவள் இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

......................................................................,
நிறுவன தலைவரின் கையொப்பம்.

பெயர் : ..............................................................................
பதவி : ..............................................................................
திணைக்களம் : ...................................................................
திகதி : ..............................................................................

8 - 906

## குண்டசாலை பிரதேச சபை

மத்திய மாகாண அரச சேவையின் பதவி வெற்றிடங்கள்

குண்டசாலை பிரதேச சபையில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கெனத் தகைமைகளைக் கொண்டுள்ள குண்டசாலை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் | சம்பளத் திட்டம் | ஆட்சேர்ப்பு |
|---|---|---|---|---|---|
| 01. | காவற்காரர் தரம் - III | 01 | இரு தடவைக்கு மேற்படாது க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் குறைந்தது 02 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் 05 பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். | PL - 1 - 2016 ரூ. 24,250 - 10 x 250 - 10 x 270 - 10 x 300 - 12x330 - ரூ. 36,410.00 | கட்டமைப்பான நேர்முகத் தேர்வின் மூலம் |

**02. ஆட்சேர்ப்புக்கான பொதுவான நிபந்தனைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். தற்போது அரச நிறுவனமொன்றில் சேவையில் உள்ளவர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை பொருந்தாது.

(iii) குண்டசாலை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் தொடராகக் குறைந்தது 03 வருடகால நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். (வாக்காளர் பதிவேடு அல்லது பிரதேச செயலாளர் வழங்கிய சான்றிதழ் மூலம் அதனை நிரூபித்தல் வேண்டும்).

(iv) குண்டசாலை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வதிவோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

(v) சிறந்த நல்லொழுக்கம் உள்ளவராகவும் நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

(vi) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்பட்டவராக இருத்தல் கூடாது.

(vii) அரச அல்லது உள்ளூராட்சி சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது.

(viii) பொது நிருவாக சுற்றறிக்கை 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராக இருத்தல் கூடாது.

(ix) குண்டசாலை பிரதேச சபையில் தற்போது சமயோசித/பதிலீட்டு /தற்காலிக/ஒப்பந்த /தன்னார்வு/நிரந்தர அடிப்படையில் பணியாற்றுவோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

(x) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் மத்திய மாகாணத்தில் இந்தப் பதவிகளுக்கெனப் புதிய ஆட்சேர்ப்பு விதிகள் திருத்தம் செய்வது, மற்றும் விதிகளைப் பதிலீடு செய்வது மற்றும் ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும், தாமதப்படுத்தும் அல்லது இந்த விளம்பரத்தை இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரமும் குண்டசாலை பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

**03. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனை :**

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையவை. மூன்று வருடகாலத் தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படுபவை. நிரந்தரப் பணியாளர்கள் 01 வருட காலத்துக்கு உட்படுவர்.

(ii) அநாதைகள் விதவைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(iii) அரசகரும மொழிகள் பற்றிய கொள்கைகளுக்கு இணங்குதல் வேண்டும்.

(iv) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக இலங்கைக் குடியரசின் தாபனக் கோவையின் ஏற்பாடுகள், அரசாங்க நிதிப் பிரமாணங்கள், அரச திணைக்களக் கட்டளைகள், மத்திய மாகாண சபை அல்லது குண்டசாலை பிரதேச சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் கட்டளைகளுக்கும், நியமங்களுக்கும் அமைய செயற்படுவதற்குப் பணியாளர்கள் உட்படுதல் வேண்டும்.

03. தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். விண்ணப்பப் படிவத்துடன் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ்;
(ii) கல்விச் சான்றிதழ்கள்;
(iii) தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி;
(iv) பிரதேச செயலாளர் உறுதிப்படுத்திய தமது வதிவிடச் சான்றிதழ்;
(v) அண்மையில் பெறப்பட்ட 02 குணச் சான்றிதழ்கள் ( அவற்றுள் 01 கிராம அலுவலர் வழங்கியதாக இருத்தல் வேண்டும்);
(vi) சேவை அனுபவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்;
(vii). ஏனைய தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள்.

04. தொழிற் தகவல்கள் உள்ளிட்ட ஏனைய முழு விபரங்களையும் கொண்ட பின்வரும் மாதிரிக்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் உரிய சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து 2018.09.18 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது நேரில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

05. விண்ணப்பத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

06. தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையில் பணியாற்றுவோர் தமது விண்ணப்பங்களைத் தாபனத் தலைவரது பரிந்துரையுடன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

07. குறிக்கப்பட்ட திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

எஸ். ஆர். அதாவுத,
செயலாளர்,
குண்டசாலை பிரதேச சபை,
மெனிக்ஹின்ன.

2018, ஓகத்து 14.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**குண்டசாலை பிரதேச சபையின் .......................................................... பதவிக்கான விண்ணப்படிவம்**

1. பெயர் முதலெழுத்துக்களுடன் : ..........................................................................................................................
முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் : ..........................................................................................

2. நிரந்தர முகவரி : ................................................................................................................................

3. பிறந்த திகதி : வருடம் : ............................. மாதம் : ................................. திகதி : .....................................

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

5. பால் : ஆண் / பெண் : ................................................................................................................

6. தொலைபேசி இலக்கம் : ..........................................................................................................

7. விவாக நிலை : விவாகமானவர் / தனித்தவர் : ..........................................................................

8. கல்வித் தகைமைகள் :

8.1 விண்ணப்பதாரி இறுதியாக சித்தியடைந்த வகுப்பு : சிங்களம் : ..................................................................
தமிழ் : ........................................................................

8.2 க. பொ. த. (சா. த) பரீட்சை :
வருடம் : ................................... மாதம் : ......................................
சுட்டிலக்கம் : ............................................
பெறுபேறு :

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

8.3 க. பொ. த. (உ. த) பரீட்சை -
வருடம் : ................................... மாதம் : ......................................
சுட்டிலக்கம் : ...........................................
பெறுபேறு :

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

09. தொழிற் தகைமைகள் மற்றும் அனுபவம் : ..............................................................................................................................

10. ஏனைய தகைமைகள் : ..............................................................................................................................

11. நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் கருதப்பட்டவரா என்ற விபரம் :

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் நான் அறிந்த வகையில் உண்மையானவையெனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விடயங்களுள் ஏதேனும் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமனத்துக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவர் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கம் நான் ஆளாவேன் என்று அறிவேன்.

திகதி : .......................................... ..................................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

(அரச சேவை/மாகாண அரச சேவை/அரச கூட்டுத்தாபன /சட்டவாக்க சபையில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்)

திரு./ திருமதி / செல்வி ................................................. என்ற விண்ணப்பதாரி இந்த நிறுவனத்தில் திணைக்களத்தில் ......................................... ஆகப் பணியாற்றுகிறார். அவரது வேலை, நடத்தை திருப்தியானவை எனவும், அவர் எவ்வகையிலான

ஒழுக்காற்றுத் தண்டத்துக்கும் உட்படவில்லை என்பதையும் அதற்கென நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்தி அவரது விண்ணப்பத்தைப் பரிந்துரை செய்கின்றேன். அவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அவரது தற்போதைய சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும் /முடியாது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : .......................................... ..................................................................................,

திணைக்களத் தலைவரது கையொப்பம்.

8 - 985

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**கடுவெல மாநகர சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 71 (1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீதி "சமாதி மாவத்தை" என பெயரிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

சஞ்சீவ பந்துகீர்த்தி,
நகர ஆணையாளர்,
கடுவெல மாநகர சபை.

கடுவெல மாநகர சபை,
2018, ஓகத்து 07.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| 1. | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | : | கடுவெல மாநகர சபை |
| 2. | மாவட்டம் | : | கொழும்பு |
| 3. | கிராம சேவையாளர் பிரிவு | : | 490 - அத்துருகிரிய |
| 4. | வீதியின் தற்போதைய பெயர் | : | இல்லை |
| 5. | புதிதாக இடப்பட்டுள்ள பெயர் | : | சமாதி மாவத்தை |
| 6. | வீதியின் விவரம் | | |

(i) **வீதியின் தொடக்கம் :**

| | | |
|---|---|---|
| இடதுபுறம் | - | அத்துருகிரிய கொடகம வீதியில் 261/9 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் |
| வலதுபுறம் | - | அத்துருகிரிய கொடகம வீதியில் 261/6 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் |

(ii) **வீதியின் முடிவு :**

| | | |
|---|---|---|
| இடதுபுறம் | - | பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் அமைந்துள்ள 261/4 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் |
| வலதுபுறம் | - | பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் 261/3 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் மற்றும் வீதியின் முடிவில் 261/5 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் |

8 - 774/1

---

**கடுவெல மாநகர சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 71 (1) ஆம் பிரிவின் கீழ் மேல்*

மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீதி "ட்ரென்குவில் டெரஸ்" என பெயரிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

சஞ்சீவ பந்துகீர்த்தி,
நகர ஆணையாளர்,
கடுவெல மாநகர சபை.

கடுவெல மாநகர சபை,
2018, ஓகத்து 07.

### அட்டவணை

| | | |
|---|---|---|
| 1. உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | : | கடுவெல மாநகர சபை |
| 2. மாவட்டம் | : | கொழும்பு |
| 3. கிராம சேவையாளர் பிரிவு | : | 473 - கொத்தலாவல |
| 4. வீதியின் தற்போதைய பெயர் | : | இல்லை |
| 5. புதிதாக இடப்பட்டுள்ள பெயர் | : | ட்ரென்குவில் டெரஸ் |
| 6. வீதியின் விவரம் | | |

(i) **வீதியின் தொடக்கம் :**

இடதுபுறம் - கடுவெல கொள்ளுபிட்டி 177 ஆம் இலக்க பேரூந்து வீதியில் 168/1/ஈ இலக்கமுடைய வெற்றுக்காணி.

வலதுபுறம் - கடுவெல கொள்ளுபிட்டி 177 ஆம் இலக்க பேரூந்து வீதியில் 42/3 எனும் வீட்டு இலக்கமுடைய ஆதனம்.

(ii) **வீதியின் முடிவு :**

இடதுபுறம் - பெயரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வீதியில் 168/1/டீ எனும் இலக்கத்தைக் கொண்ட வெற்றுக்காணி.

வலதுபுறம் - பெயரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வீதியில் அமைந்துள்ள ஒரு வெற்றுக்காணி.

08 - 774/2

---

## கடுவெல மாநகர சபை

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 71 (1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீதி "சுஹத மாவத்தை" என பெயரிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

சஞ்சீவ பந்துகீர்த்தி,
நகர ஆணையாளர்,
கடுவெல மாநகர சபை.

கடுவெல மாநகர சபை,
2018, ஓகத்து 07.

### அட்டவணை

| | | |
|---|---|---|
| 1. உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | : | கடுவெல மாநகர சபை |
| 2. மாவட்டம் | : | கொழும்பு |
| 3. கிராம சேவையாளர் பிரிவு | : | 472/B பஹல போமிரிய |
| 4. வீதியின் தற்போதைய பெயர் | : | இல்லை |
| 5. புதிதாக இடப்பட்டுள்ள பெயர் | : | சுஹத மாவத்தை |
| 6. வீதியின் விவரம் | | |

(i) **வீதியின் தொடக்கம் :**

இடதுபுறம் - கடுவெல பஹல போமிரிய மேதானந்த மாவத்தையில் 212/சீ/4 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்.

வலதுபுறம் - கடுவெல பஹல போமிரிய மேதானந்த மாவத்தையில் 212/2/B எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்.

(ii) **வீதியின் முடிவு :**

இடதுபுறம் - பெயரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வீதியில் 213/2 எனும் இலக்கமுடைய வெற்றுக்காணி.

வலதுபுறம் - பெயரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வீதியில் அமைந்துள்ள 213/2/ஏ எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்.

8 - 774/3

---

**கடுவெல மாநகர சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 71 (1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீதி "ஸ்வர்ண பீளேஸ்" என பெயரிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

சஞ்சீவ பந்துகீர்த்தி,
நகர ஆணையாளர்,
கடுவெல மாநகர சபை.

கடுவெல மாநகர சபை,
2018, ஒகத்து 07.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | : | கடுவெல மாநகர சபை |
| 2. மாவட்டம் | : | கொழும்பு |
| 3. கிராம சேவையாளர் பிரிவு | : | 488 - கொரதொட்ட |
| 4. வீதியின் தற்போதைய பெயர் | : | இல்லை |
| 5. புதிதாக இடப்பட்டுள்ள பெயர் | : | ஸ்வர்ண பிளேஸ் |
| 6. வீதியின் விவரம் | | |

(i) **வீதியின் தொடக்கம் :**

இடதுபுறம் - கொரதொட்ட ராஜசிங்க மாவத்தையில் 148/1/B எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்.

வலதுபுறம் - கொரதொட்ட ராஜசிங்க மாவத்தையில் 148/1 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்.

(ii) **வீதியின் முடிவு :**

இடதுபுறம் - பெயரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வீதியில் 148/7/ஏ எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்.

வலதுபுறம் - பெயரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வீதியில் 148/3/ஏ எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்.

8 - 774/4

---

**கடுவெல மாநகர சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 71 (1) ஆம் பிரிவின் கீழ் மேல்*

*மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீதி "பாத்திமா ஆலய வீதி" என பெயரிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*சஞ்சீவ பந்துகீர்த்தி,*
*நகர ஆணையாளர்,*
*கடுவெல மாநகர சபை.*

*கடுவெல மாநகர சபை,*
*2018, ஓகத்து 07.*

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| 1. | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | : | கடுவெல மாநகர சபை |
| 2. | மாவட்டம் | : | கொழும்பு |
| 3. | கிராம சேவையாளர் பிரிவு | : | தலங்கம வடக்கு A |
| 4. | வீதியின் தற்போதைய பெயர் | : | இல்லை |
| 5. | புதிதாக இடப்பட்டுள்ள பெயர் | : | பாத்திமா ஆலய வீதி |
| 6. | வீதியின் விவரம் | | |

(i) **வீதியின் தொடக்கம் :**

இடதுபுறம் - கடுவெல பத்தரமுல்ல வீதியில் Lodestar International School.
வவதுபுறம் - தனியார் நிறுவனமொன்றின் கட்டிடம்.

(ii) **வீதியின் முடிவு :**

இடதுபுறம் - பெயரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வீதியில் அமைந்துள்ள ஒரு வெற்றுக் காணி.
வலதுபுறம் - பெயரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வீதியில் 11/ஏ எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்.

*8 - 774/5*

---

**கம்புறுபிட்டிய பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24(1) (ஆ) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 (1) (ஆ) ஆம் பிரிவின் படி தென் மாகாண சபை மாத்தறை மாவட்டத்தின் கம்புறுபிட்டிய பிரதேச சபையினால் இங்கு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீதிகளை கம்புறுபிட்டிய பிரதேச சபைக்குரிய வீதிகளாக விளம்பரப்படுத்தப்படுவதாக இதன் மூலம் அறியத் தருகின்றேன்.*

*இது தொடர்பாக பொது மக்களினால் வீதிகளுக்குரிய காணிகளின் உரித்தாளர்களாக உரிமைகோருபவர்களிடமிருந்து ஏதாவது மறுப்புக்கள் தெரிவிப்பதாயின், இவ்வறிவித்தல் வர்த்தமானியில் வெளிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் தனக்குரிய உரிமையை அத்தாட்சிப்படுத்துவதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 (2) ஆம் பிரிவின்படி செயற்படும்படியும், எதிர்காலத்தில் இந்த வீதிகளுக்குரிய காணிகளை அரசு எடுத்துக்கொள்ள உத்தேசித்துள்ளதாக இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*இக்கால வரையறைக்குள் ஏதும் மறுப்புக்கள் முன் வைக்கப்படாதவிடத்து, மறுப்புக்கள் ஏதும் இல்லை எனக் கருதி அட்டவணையில் குறித்த வீதிகள் கம்புறுபிட்டிய பிரதேச சபைக்குரிய வீதிகள் என ஏற்றுக் கொண்டு நிருவகிக்கப்படுவதாக வெளிப்படுத்தப்படும் என இத்தால் மூலம் பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.*

*தலைவர்,*
*கம்புறுபிட்டிய பிரதேச சபை.*

**அட்டவணை**

வீதி பதிவு செய்தல்

| வீதியின் பெயர் | கிராம அலுவலர் பிரிவு | இரு பகுதிகளிலுமுள்ள காணி வலது | இடது | ஆரம்பம் | முடிவு | தூரம் மீற்றர் | அகலம் அடி |
|---|---|---|---|---|---|---|---|
| 01 மில்லகஹ வத்த வீதி | கதார கிழக்கு | ஹிரிதெனிய பஹல கேல்ல 1 | ஹிரிதெனிய பஹல கேல்ல 1 மில்லகஹ வத்த C பகுதி | கம்புறுபிட்டிய முலட்டியன பிரதான வீதியின் ஆந்தபான பொது வைத்திய சாலையின் எதிரே | மில்லகஹ வத்த காணி | 60 மீற்றர் | 12 |
| 02 மாஸ்முல்ல ஓவிட்டி கமுவ வீதி | 321/பீ உல்லல மாஸ்முல்ல | பாணதுரே கெதரஹேன காணி | கிதலகமஹேன காணி | பாணதுரே கெதரஹேன 321/பீ, உல்லல ஓவிட்டி கமுவ | லக்மாலி கொடல்ல ஹேன ஓவிட்ட கமுவ தெற்கு கரபுடுகல | 100 மீற்றர் | 10 |

8 - 780

---

**மாத்தறை மாநகர சபை**

குறை நிரப்பப்படும் மதிப்பீட்டு அறிக்கை -2018

2018 ஆம் வருடத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட வரவு செலவுகள் உட்படுத்தப்பட்ட குறை நிரப்பப்படும் விலைமதிப்பு அறிக்கையை 2018.08.24 ஆந் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்கு பொது மக்கள் பரிசீலனைக்காக இவ்வலுவலகத்தில் வெளிப்படையாக வைக்கப்பட்டிருக்கும் என்பதை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 214 (2) (ஆ) ஆம் அதிகாரத்தின் கீழ் இத்தால் அறியத்தருகின்றேன்.

டீ. ஜீ. ரன்ஜித் யசரத்ன,
நகர சபைத் தலைவர்,
மாநகர சபை,
மாத்தறை.

மாத்தறை மாநகரசபை அலுவலகம்,
2018, ஆவணி 24 ஆந் திகதி

08-831

---

# நானாவித அறிவித்தல்கள்

**மாத்தறை மாநகர சபை**

விளம்பரப் பலகை தொடர்பான கட்டணம் அறவிடல்

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (மேலதிக துணைவிதி) பிரிவின் 2 ஆம் உப பிரிவின் கீழ் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களினால் தயாரிக்கப்பட்டதும் 1989.01.20 ஆந் திகதிய 547/17 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேலதிக துணைவிதியில் 2004.02.10 ஆந் திகதி மற்றும் 2008.09.09 ஆந் திகதி நடத்தப்பட்ட நகர சபை கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் அதன்படி II ஆவது பகுதியில் குறித்த விளம்பர அறிவித்தல்கள் தொடர்பாக உள்ள துணைவிதியின் படி LED விளம்பர அறிவித்தல்களுக்காக உத்தரவுப் பத்திரம் ஒன்றைப் பெற கீழ்காணும் அட்டவணையில் குறித்திருக்கும் கட்டணத்தை 2018 ஆம்

வருடத்திற்கென விதித்து அறவிடப்படவும் 2018, ஓகத்து 30 ஆந் திகதிக்கு முன் மாநகர சபையால் இந்த உத்தரவுப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளல் வேண்டுமெனவும் 2018.06.07 ஆந் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 7: 01 2018/மா/மாநகர/நிதிஒ/16 இன் கீழ் ஏகமனதாக சபை சம்மதித்ததாக இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.

**அட்டவணை**

1. மாத்தறை ஸ்ரீ ரத்னபால மாவத்தை மற்றும் அக்குரஸ்ஸ வீதிக்கு எதிரே பொருத்தப்பட்ட விளம்பரங்களில் சதுர அடிக்கு ரூபா 1,000.00 வரை அறவிடவும்.
2. மாத்தறை அநகாரிக்க தர்மபால மாவத்தைக்கு எதிரே பொருத்தப்பட்ட விளம்பரங்களில் சதுர அடிக்கு ரூபா 1,250.00 வரை அறவிடவும்.
3. மாத்தறை மாநகர சபை பூமியில் பொருத்தப்பட்ட விளம்பரங்களில் சதுர அடிக்கு ரூபா 2,000.00 வரை அறவிடப்படும்.

டீ. ஜீ. யசரத்ன,
தலைவர்,
மாத்தறை மாநகர சபை,

மாத்தறை மாநகரசபை அலுவலகம்,
2018, ஓகத்து 03.

8-728

---

**நெலுவ பிரதேச சபை**

கழிவகற்றல் சேவைக் கட்டணம் அறவிடல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் மற்றும் 126 (ix) ஆ பிரிவின் பிரகாரம் கிடைக்கப்பெற்ற அதிகாரத்தின் படி நெலுவ பிரதேச சபையினால் 2005.10.18 ஆந் திகதி ஏற்றுக் கொள்ளப்பட்ட 1988.08.23 ஆந் திகதிய 520/7 பொதுத் துணைவிதியின் (04) ஆவது பிரிவின் படி கழிவகற்றல் சேவை மூலம் சேவை வழங்கப்படும் ஏதாவது நிலையத்தின் வதிவாளர்/வியாபாரி என்பவருக்கு கீழே குறிப்பிடப்பட்ட விதத்தில் கழிவகற்றல் கட்டணமொன்று நெலுவ பிரதேச சபைக்கு 2018 ஆம் வருடத்தின் யூலை மாதம் தொடக்கம் அறவிடப்பட 2018, மே மாதம் 15 ஆந் திகதி சபைக் கூட்டத்தில் தீர்மானித்துள்ளதாக இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

எம். ஐ. ஜீ. சுனில்,
தலைவர்,
நெலுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
நெலுவ,
2018, யூலை 02.

| | | | |
|---|---|---|---|
| 1. | மரக்கறி வியாபார நிலையம் | ரூபா | 1,000.00 - 1,500.00 |
| 2. | மரக்கறி வியாபார நிலையம் | ரூபா | 800.00 - 1,000.00 |
| 3. | ஹோட்டல்/சிற்றுண்டிச்சாலை | ரூபா | 1,000.00- 1,500.00 |
| 4. | வேறு வியாபாரங்கள் | ரூபா | 200.00- 800.00 |

8-905

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.